[30th March 1966

of gold have been invested by the Temples, Churches and Mosques as detailed below :—

		GRAMMES
Temples	... ...	1,44,908
Churches	... ...	2,453
Mosques	... ...	1,987
	Total ...	1,49,348

திரு. வை. சங்கரன் : இந்த விவரங்களைப் பார்த்தால், ஏதோ இந்த ராஜ்யத்தில் இந்துக்கள் மட்டும் தான் இருக்கிறார்கள் தற்காப்புக்காக, மற்றபடி முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள் இதிலே பங்கு கொள்ளவில்லை, அவர்களுக்குப் பொறுப்பு இல்லை என்ற தவறான கருத்து ஏற்படுவதற்கு இடம் இருக்கிறது. ஆகவே முஸ்லிம், கிருஸ்துவ கோவில்களுக்கும் இதை எடுத்துக் காட்டி, அதிகமாக வசூல் செய்வதற்கு என் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் தகவல்படி கிறிஸ் தவர்கள், இஸ்லாமியர்கள் இவர்களுடைய அறநிலையங்களும் கொடுத்திருப்பதால், அம்மாதிரி தவறுதலான கருத்து ஒன்றும் ஏற்படாது.

திரு. கரு. சீமைச்சாமி : எச். ஆர். ஈ., ஆண்டு ஸி. போர்டு கோவில்களை கட்டாயப்படுத்தி இந்தத் தங்கம் வசூல் செய்யப் படுகிறது. அதே மாதிரி முஸ்லிம் கோவில்கள், சர்ச்சுகளுக்கும் ஏதாவது போர்டு இருக்கிறதா ? அவர்களையும் இம்மாதிரி வசூல் செய்யும்படி அரசாங்கம் ஏதாவது உத்தரவிட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது கனம் அங்கத் தினர் அவர்கள் கேட்பதிலிருந்து கட்டாயப்படுத்தி வசூலிக்க வேண்டும் என்று சொல்லுகிற மாதிரி இருக்கிறது. புகார் சொல்லு கிறார்கள், இஸ்லாமிய, கிருஸ்துவ கோவில்கள் ஏன் கட்டாயப் படுத்தப்படவில்லை என்று. கட்டாயப்படுத்தினதாக என்னிடம் தகவல் இல்லை. எந்தத் தர்மகர்த்தாவும் அந்தமாதிரி புகார் சொல்ல வில்லை. கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தகவல் இருந்தால் அதைத் தெரிவிக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : கள்ளத் தங்கம் சம்பந்தமாக . .

MR. SPEAKER : The Hon. Member cannot put that question now as it does not relate to the main question. I am not allowing that question. Next question.

கோவை அரசினர் கலைக்கல்லூரி

*538 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை அரசினர் கலைக் கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களிடமிருந்து

30th March 1966]

சலுகைகள் அளிக்க வேண்டும் எனக்கோரி விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) கல்லூரிகளில், 1965-66, 1966-67-ம் ஆண்டுகளில் பி.ஏ. பட்டப்படிப்பைத் தமிழில் படிக்கும் மாணவர்களின் நலனை முன்னிட்டு முழுச் சம்பளச் சலுகைகள், பயிற்சி உதவிப் பணம் (Stipend) வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

State Educational Survey

* 539 Q.—SRI V. SANKARAN :
SRI T. P. ALAGAMUTHU :
SRI C. CHIRANJEEVULU NAIDU : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have proposed to conduct any State Educational Survey ; and

(*b*) if so, the details thereof and the benefits expected to accrue therefrom ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Government have decided to participate in the Second All-India Educational Survey conducted under the auspices of the National Council of Educational Research and Training. They have set up a State Educational Survey Unit. The object of this Survey is to make the information collected by the First All-India Educational Survey (1957) up-to-date. The adequacy of the existing facilities at the primary and the secondary level is proposed to be assessed and a plan for the future covering these sectors is likely to be evolved as a result of this Survey.

திரு. வை. சங்கரன் : இதுவரைக்கும் எவ்வளவு வேலைகள் முடிவடைந்திருக்கின்றன ? முற்றிலும் முடிவதற்கு எத்துணைக் காலம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, may I know who are the officers entrusted with the work of collecting these particulars at the level of the District Educational Officer?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டெப்யூடி இன்ஸ்பெக்டர் கிரேடில் ஒவ்வொரு எஜுகேஷன் மாவட்டத்திற்கும் நியமிக்கப் படுகிறார்கள். அவர்கள் ஜில்லா கல்வி அதிகாரியினுடைய காரியா லயத்தில் வேலை செய்வார்கள். ஜில்லா கல்வி அதிகாரிகள் இதை யெல்லாம் மேற்பார்வையிடுவார்கள்.